# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

12th MARCH 2023 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 18






## அனுர ஜனாதிபதியாகி இருந்தால்...???

05

## மதில் மேலால் பாய்ந்து பாடசாலைக்குச் சென்ற ரணில்

06

# தேர்தல் நிச்சயமில்லை




தேர்தலை நடத்துவதற்கு பொருத்தமான திகதி ஏப்ரல் 25 என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளபோதிலும் அதற்கு நிதி வழங்குவது தொடர்பில் நிதி அமைச்சு இன்னும் பச்சைக் கொடி கட்டாததால் தேர்தல் மேலும் ஒத்திவைக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தேர்தலை நடத்துவதற்கான நிதியை தேர்தல்கள் ஆணைக்குழு பல தடவைகள் நிதி அமைச்சிடம் கேட்டுவிட்டது.எந்த பதிலும் இல்லை.

நிதி அமைச்சர் என்ற வகையில்,இந்த நிதியை ஜனாதிபதியிடம் கேட்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு பணமில்லை என்று கூறி வரும் ஜனாதிபதி இந்த நிதியைக் கொடுப்பது சந்தேகமே.இதனால் தேர்தல் மேலும் ஒத்திவைக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்களில் பேச்சு அடிபடுகிறது.

## 20 இற்கு முன் வழங்க முடியாது

பணம் இன்னும் கிடைக்கவில்லை என்றும் அதனால் வாக்குச் சீட்டுக்களை 15 ஆம் திகதிக்கு முன் வழங்க முடியாது என்றும் அரச அச்சகர் கண்காணி லியனகே தெரிவித்துள்ளார்.

இதற்கான நிதியை நிதி அமைச்சிடம் கேட்டபோதிலும் இன்னும் அந்த நிதியை நிதி அமைச்சு வழங்கவில்லை இதனால் 20 ஆம் திகதிக்கு முன் வாக்குச் சீட்டுக்களை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்க முடியாது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

ஆனால்,தபால் வாக்குச் சீட்டுக்களை 5 நாட்களுக்குள்ளும் ஏனைய வாக்குச் சீட்டுக்களை 20 முதல் 25 நாட்களுக்குள்ளும் வழங்க முடியும் என்று அரச

02



## ஜனவரியில் ஜனாதிபதி தேர்தல்

அடுத்த வருடம் ஜனவரி மாதம் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடொன்றை அரசு செய்து வருவதாக அரச உயர் மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காகத்தான் உள்ளூராட்சி சபைத் தேர்தலை அரசு ஒத்திப்போடுவதற்குத் தயாராகிறது என்று அந்தத் தகவல்கள் மேலும் கூறுகின்றன.

இது தொடர்பில்

02






## விமான டிக்கட் விலை இறக்கம்

வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு இருப்பவர்களுக்கு இது நற்செய்தி.

விமான டிக்கட்களின் விலைகள் 5 வீதத்தால் குறைந்துள்ளதாக டிக்கட் விற்பனை முகவர் நிலையங்கள் தெரிவித்துள்ளன. டொலரின் பெறுமதி இறக்கமே இதற்கு காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.



## எரிபொருள் விலை குறையும்



டொலரின் பெறுமதி குறைந்துள்ளதால் எரிபொருட்களின் விலைகளும் குறைவதற்கு வாய்ப்புண்டு என்று அரச தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்த மாதம் முதல் வாரத்தில் குறிப்பிடத்தக்க அளவு எரிபொருள் விலை குறைப்பு இடம்பெறும் என்று இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்புர தெரிவித்துள்ளார்.




புதுசுடர்
www.puthusudar.lk
2023 MARCH 12 - SUNDAY

# மீண்டும் நாடகமா?

உள்ளூராட்சி சபைத் தேர்தல் என்பது இலங்கை மக்களுக்கு எட்டாக் கனிபோல்தான் தெரிகிறது.

ஒரு தடவை தேர்தலை அறிவித்து–பிறகு அதைக் காலவரையறை இன்றி ஒத்திவைத்து–இப்போது மீண்டும் தேர்தலை நடத்தும் ஒரு நிலைப்பாட்டுக்கு வந்திருக்கிறது தேர்தல்கள் ஆணைக்குழு.

அதுவும் நிச்சயம் இல்லாத நிலைதான்.ஏப்ரல் 25 தேர்தலுக்கு பொருத்தமான நாள் என்று ஆணையாளர் தெரிவிதித்துள்ளார்.ஆனால்,அவரும் உறுதியாக தேர்தல் இந்தத் திகதியில்தான் என்று சொல்லவில்லை.

பழைய பல்லவிதான் இப்போதும். தேர்தல் ஆணையாளர் நிதி அமைச்சிடம் பணம் கேட்கிறார்–ஜனாதிபதியிடம் பணம் கேட்கிறார். அவர்கள் பதில் இல்லை.

15 ஆம் திகதிக்குள் தபால் வாக்குச் சீட்டுக்களைத் தருமாறு அரச அச்சகரிடம் கேட்டுள்ளார் ஆணையாளர் .நிதி அமைச்சு இன்னும் பணம் தரவில்லை. அதனால் உரிய நேரத்தில் வாக்குச் சீட்டுக்களை வழங்க முடியாது என்கிறார் அச்சகர்.

இதுவும் பழைய பல்லவிதான். மறுபுறம்,அரச தரப்பு பொருளாதாரத்தை முன்னேற்றுவதுதான் இந்த நேரத்தில் அவசியம் தேர்தல் அல்ல என்கின்றனர்.இதுவும் பழைய பல்லவிதான்.

மறுபுறம்,தேர்தல் கடமைகளில் பொலிஸாரை நிறுத்துவதற்கு–அதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு 100 கோடி ரூபாவை கேட்கிறது பொலிஸ் திணைக்களம்.

இப்படி எல்லாமே பழையதாகவே இருக்கிறது. தேர்தலை ஒத்திப் போடுவதற்கு முன் கேட்ட அதே கதை களைத்தான் இப்போதும் கேட்கிறோம்.

இதனால் தேர்தல் நடக்கும் என்பது நிச்சயமற்ற ஒன்றாகவே காணப்படு கிறது.எதிர்க் கட்சிகளுக்கும் நம்பிக்கை இல்லை.இதனால் சில காட்சிகள் மீண்டும் தேர்தல் பிரசாரங்களில் இறங்குவதற்குத் தயங்குகின்றன.சும்மா காலமும் பணமும் விரயமாகுமே என்ற பயம்.

இது தொடர்பில் அரசுக்குள் தேடிப் பார்த்தால் அதற்குள் இருந்து கிடைக்கும் தகவல் என்னவென்றால் அரசு ஜனாதிபதித் தேர்தலுக்குத் தயாராகிறது. அதற்காகத் தான் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்கத் திட்டமிடுகிறது என்கிறது என்பதுதான்.

உள்ளூ ராட்சி சபைத் தேர்தலில் அரசு தோல்வியைத் தழுவினால் இனி அடுத்து வருகின்ற அத்தனை தேர்தல்களிலும் தோல்விதான். அதனால்தான் நேரடியாக ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்வதற்குத் தயாராகிறது அரசு. உள்ளூராட்சி சபைத் தேர்தலோ – ஜனாதிபதித் தேர்தலோ அரசு வெல்லுமா என்பது கேள்விக்குறி.

டொலர் விலை குறைந்திருக்கலாம். அதன் காரணமாக சில பொருட்களின் விலைகள் குறைந்திருக்கலாம்.ஆனால்,இவை எவையும் மக்கள் உணரும் படியாக இல்லை. நூறு ரூபாவை அதிகரித்து விட்டு 10 ரூபாவை குறைத்தால் அது மக்கள் உணரும்படியான குறைப்பாகுமா?

டொலரின் பெறுமதி கூடும்போதெல்லாம் கையிருப்பில் இருந்த பொருட்களின் விலைகள் எல்லாம் கூடின.இப்போது டொலரின் விலை குறையும்போது கையிருப்பில் உள்ள பொருட்களின் விலைகள் குறைவதில்லை.

கேட்டால் அவை கூடிய விலை கொடுத்து வாங்கிய பொருட்கள் என்கிறார்கள். ஆனால்,குறைந்த விலை கொடுத்து வாங்கிய பொருட்களை டொலரின் விலை கூடியபோதே இங்கு கூட்டினார்கள்.

இப்படி வர்த்தகர்கள் மக்களின் வயிற்றில் அடிக்கும்போது இதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆனால்,டொலரின் விலை குறைந்துவிட்டது.இனி எல்லாம் தானாக குறையும் என்று அரசு நினைத்திருப்பது முட்டாள்தனம்.அந்த நினைப்போடு தேர்தலுக்குச் செல்வது அதைவிட முட்டாள்தனம்.

ஆகவேதான்,இந்த சூழ்நிலையில் எந்தத் தேர்தலுக்குச் சென்றாலும் அரசு மண் கவ்வுவது நிச்சயம்.

## ஜனவரியில்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

ஓரிரு மாதங்களுக்கு முன் வஜ்ஜிர அபயவர்தனவும் ரணில் விக்கிரமசிங்கவும் பசில் ராஜபக்ஸவை அழைத்துப் பேசினர்.

ரணில் விக்ரமசிங்கவை பொது வேட்பாளராகப் போடுவதற்கு அவர்கள் இருவரும் மொட்டு கட்சியின் ஆதரவைக் கோரி இருந்தனர்.

மொட்டு–ஐக்கிய கட்சியின் வாக்குகளையும் வடக்கு–கிழக்கு தமிழ்–முஸ்லிம் வாக்குகளையும்–மலையக மக்களின் வாக்குகளையும் வைத்து வெற்றி பெறலாம் என்று வஜ்ஜிர அப்போது பசிலிடம் கூறி இருந்தார்.

## 20 இற்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

*அச்சகர் தன்னிடம் கூறினார் என்று தேர்தல்கள் ஆணையாளர் நிமால் புஞ்சி ஹேவா தெரிவித்துள்ளார்.*

# பல்துறையைச் சேர்ந்த 150 தமிழ், முஸ்லிம் பெண் ஆளுமைகள் கௌரவிப்பு!




(அபு அலா)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி ஹலோ எப்.எம். நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட மகளிர் தின நிகழ்வு நேற்று மாலை (08) திருமலை நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி எப்.எம். சரீக் தலைமையில் இடம்பெற்ற இந்த மகளிர் தின நிகழ்வில், திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட தமிழ், முஸ்லிம் பெண் ஆளுமைகள் பாராட்டி கௌரவிக்கப்பட்டு அவர்களுக்கான சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் ஆரியபதி கலபதி பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே. முரளிதரன், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜீ.திசாநயக்க ஆகியோர் விஷேட அதிதிகளாகவும், சிறப்பு அதிதிகளாக திருகோணமலை பட்டிணமும் சூழலும் பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன், சர்தாபுர விஷேட அதிரடிப்படை முகாமின் பொறுப்பதிகாரி எம்.ஆர்.குணசேகர ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

ஹலோ எப்.எம். நிறுவனத்தினால் வருடா வருடம் நடாத்தப்பட்டு வருகின்ற சர்வதேச மகளிர் தினத்தில் பல்துறையைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள பெண் ஆளுமைகள் கௌரவிக்கப்பட்டு வருகின்றமையும், இம்முறை திருகோணமலை மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பல்துறையைச் சேர்ந்த 150 தமிழ், முஸ்லிம் பெண் ஆளுமைகள் கௌரவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. இதன்போது மகளிர்களினால் கலை, கலாசார நிகழ்வுகள் இடம்பெற்றதும் விஷேட அம்சமாகும்.

காசாளர் தேவை (ஆண்)
(Cashier)

Bairaha உற்பத்திகளை விற்பனை செய்யும் Kwality Meat Mart நிறுவனத்துக்கு கொழும்பு மாவட்டத்துக்கு உட்பட்டவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கவும் அல்லது தொலைபேசி மூலமாக தொடர்பு கொள்ளவும்.

077 23 66 188

E-mail :- kwalitymeatmart@gmail.com

சம்பளம் - 35000/- க்கு மேல்
(மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் விற்பனை Incentive உட்பட)



# ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது துணைப்படை தாக்குதல்

துணைப்படை படை ஒன்றை உருவாக்கி ஆர்பாட்டக்காரர்கள்மீது தாக்குதல் நடத்துகிறது அரசு என்று முன்னிலை சோஷலிச கட்சியின் துமிந்த நாகமுவ கூறினார். அவர் மேலும் கூறுகையில்:

டொலர் விலை குறைந்துள்ளபோதிலும் மக்களின் வாழ்க்கையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.பொருட்களின் விலைகள் குறையவில்லை.

32 வீதமான மக்கள் உண்ண உணவின்றி உள்ளனர்.கடந்த மாதத்தில் குடும்பம் குடும்பமாக பல தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எல்லாம் வறுமை காரணமாக இடம்பெற்றவை.

வாழ வழியில்லாமல் அவர்கள் இவ்வாறு தற்கொலை செய்கின்றனர்.



imf இன் நிபந்தனைக்கு ஏற்ப மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. மின்சார சபையை இலாபமீட்டும் சபையாக மாற்றி அதை விற்பதே இதன் நோக்கம்.

தேர்தல் ஒத்திப்போடுவதை நாம் எதிர்க்கிறோம். அந்த உரிமையைக் கேட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினால் அதன்மீது தாக்குதல் நடத்துகிறது அரசு.அந்தத் தாக்குதலில் ஒருவர் பலி.

ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலத்தில் இவ்வாறான தாக்குதல்கள் தாராளமாக நடந்திருக்கின்றன.

அப்படித் தாக்குதல் நடத்துபவர்கள் யார்?இராணுவமும் இல்லை. பொலிஸும் இல்லை.விசேட அதிரடி படையும் இல்லை.

அப்படியென்றால் ஆர்ப்பாட்டத்துக்குள் நுழைந்து தாக்குதல் நடத்துபவர்கள் யார்?இராணுவ துணைப்படை ஒன்றை உருவாக்கும் திட்டம்தான் இது.



# எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு

சேர்ந்து செயற்படுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க எதிர்கட்சிகளுக்குத் தொடர்ந்து அழைப்பு விடுகிறார் என்று இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்புர தெரிவித்துள்ளார்.அவர் மேலும் கூறுகையில்,

ரணில் விக்ரமசிங்க பிரதமரானபோதும் சரி,ஜனாதிபதியானபோதும் சரி எதிர்கட்சிகளை சேர்ந்து செயற்படுவதற்கு அழைப்பு விடுத்தார்.தொடர்ந்து அழைப்பு விடுகிறார்.

சிலர் அந்த அழைப்பை ஏற்று அரசுடன் இணைந்தனர்.சிலர் அரசுக்கு ஆதரவாக கருத்துத் தெரிவிக்கின்றனர்.

சுற்றுலாவாசிகள் வரத் தொடங்கியுள்ளனர். அதைக் கெடுத்துக்கொள்ள முடியாது. பொருட்களின் விலைகள் குறைத்துக்கொண்டு செல்கின்றன.தங்கத்தின் விலையும் குறைந்துள்ளது.

டொலரின் பெறுமதி குறைந்துள்ளதால் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது.இதை மக்கள் உணரத் தொடங்கியுள்ளனர்.

தேர்தலை நடத்துவதற்கு நாங்கள் அஞ்சவில்லை. தேர்தலை நடத்தாமல் விட்டால் அதிக பாதிப்பு எங்களது கட்சிக்குத்தான்.

2018 தேர்தலில் அதிக சபைகளை கைப்பற்றியது நாங்கள்தான்.சபையை கலைத்துவிட்டால் 233 தவிசாளர்களும் 233 பிரதி தவிசாளர்களும் வீடு செல்ல வேண்டி வரும். அது எங்களுக்கு பெரும் நட்டமாகும்.

3400 இற்கு மேற்பட்ட எங்களது உறுப்பினர்கள் இல்லாமல் போவார்கள். அதனால் தேர்தல் நடத்தாமல் போனால் எங்களுக்கே அதிக நட்டம் ஏற்படும்.

அதுமட்டுமா,மாகாண சபைத் தேர்தல் நடத்தாமல் இருப்பதால் அதிலும் எங்களுக்கே நட்டம். அதிகமான முதலமைச்சர்களும் அமைச்சர்களும் உறுப்பினர்களும் எங்களது கட்சியை சேர்ந்தவர்கள். அவர்களை நாம் இழந்துள்ளோம். எல்லோரும் இப்போது வீட்டில் என்றார்.

# தேர்தல் அறிவிப்பு: மீண்டும் நாடகம்



தேர்தல் மீண்டும் நாடகமாக மாறியுள்ளது.தேர்தல் 25ஆம் திகதி உறுதியாக நடக்கும் என்று சொல்லவில்லை.தேர்தல் நடத்துவதற்கான பொருத்தமான திகதி 25 என்றுதான் ஆணையாளர் கூறியுள்ளார் என ஐக்கிய மக்கள் சக்தி எம்பி ஹெக்டர் அப்புஹாமி கூறியுள்ளார்.அவர் மேலும் கூறுகையில்

ஜனாதிபதியுடன் எங்களது கட்சி எம்பிக்கள் யாரும் டீல் வைத்துக்கொள்ளவில்லை.

ஜனாதிபதியின் அலுவலகத்துக்கு அருகே எங்களது எம்பிக்கள் யாரும் போய் நிற்பதில்லை.அரசியல் டீல் யாரும் வெளிப்படையாகவா போவார்கள்?

இந்த ஆட்சியாளர்களால் மக்கள் பிரச்சினைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.இதனால் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.இது அவர்களின் உரிமை.

நாடு வங்குரோத்து நிலையை அடைவதற்கு முன்பே நாம் ஐஎம்எவ் இடம் போகச் சொன்னோம். ஆனால்,நாடு நல்லா சீரழிந்த பின் அங்கெ போய் நிற்கிறார்கள்.

அப்போதே போயிருந்தால் இப்போது மக்களின் கழுத்தை நெருக்கி ஐஎம்எவ் இடம் உதவி கேட்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்காது.

கழுத்தை நெறிக்கும் வகையில் மின்கட்டணம் அதிகரிக்கப்பட்டது ஐஎம்எவ் இன் நிபந்தனையால்தான்.நட்டம் ஏற்படும் நிறுவனங்களை இலாபமீட்டும் நிறுவனங்களாக மாற்றி விற்பதே அந்த நிபந்தனை.

வரியைச் செலுத்தாத நிறுவனங்கள் எத்தனையோ உள்ளன.அவர்களிடம் இருந்து வரியை அரவிடுவதற்கு உரிய நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

அதைச் செய்யாமல் ஏழை மக்கள்மீது புதுப்புது வரிகளை சுமத்தி அவர்களிடம் இருந்து வரியை அறவிடும் முறைதான் இப்போது நடைமுறையில் உள்ளது.

ஒரு பக்கத்தில் உள்ளூர் உற்பத்திகள் வீழ்ச்சியடைந்துகொண்டு செல்கின்றன. அவற்றை தூக்கி நிமிர்த்துவதற்கு எந்த ஏற்பாடும் இல்லை.

தேர்தல் மீண்டும் நாடகமாக மாறியுள்ளது.தேர்தல் 25ஆம் திகதி உறுதியாக நடக்கும் என்று சொல்லவில்லை.தேர்தல் நடத்துவதற்கான பொருத்தமான திகதி 25 என்றுதான் ஆணையாளர் கூறியுள்ளார்.

தேர்தலுக்கு பணம் தருவதாக நிதி அமைச்சு இன்னும் சொல்லவில்லை.தபால் வாக்கட்டைகளை அச்சடிப்பதற்கு மீண்டும் பணம் கேட்கிறார்கள்.என்றார்.

## பயங்கரவாதிகள்போல் செயற்பட்டதால்தான்

# பொருளாதாரம் வீழ்ச்சி

ஒரு சிலர் பயங்கரவாதிகள்போல் செயற்பட்டதால்தான் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது என்று மொட்டு கட்சி எம்பி டபிள்யு.டி.வீரசிங்க தெரிவித்துள்ளார்.அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் பொருளாதார நிலைமை கட்டங்கட்டமாக முன்னேறி வருகின்ற நிலையில் ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள்.

இது பொருளாதார நிலைமையைக் குழப்பிவிடும்.ரணில் ரொம்பவும் கஷ்டப்பட்டு முன்னேற்றத்தை ஏற்படுத்தி வருகிறார்.அதை ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டுமென்றால் இந்தமாதிரியான ஆர்ப்பாட்டங்களை நிறுத்த வேண்டும்.

தேர்தல் நடத்த வேண்டும் என்பதுதான் எமது மொட்டு கட்சியின் நிலைப்பாடு.நாங்கள் மஹிந்த ராஜபக்ஸவின் வீட்டில் கூடி தேர்தல் பிரசாரத்தை முன்னெடுப்பதற்கு முடிவெடுத்துள்ளோம்.

25ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தேர்தல் நடப்பதற்கு முன் சில பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் நல்லது என்பதே எனது நிலைப்பாடாகும்.மருந்து தட்டுப்பாடுகள் உள்ளன. இன்னும் பல பொருளாதார பிரச்சினைகள் உள்ளன.

இவற்றையெல்லாம் தீர்த்துவிட்டு தேர்தலுக்கு சென்றால் நல்லா இருக்கும் என்பதே எனது நிலைப்பாடாகும்.இது அரசை கவிழ்க்கும் தேர்தல் இல்லையே.

இந்தத் தேர்தலால் மக்களின் பிரச்சினைகள் தீருமாக இருந்தால் இந்தத் தேர்தலை நடத்தினால் நல்லது.

ஒரு சிலர் பயங்கரவாதிகள்போல் செயற்பட்டதால்தான் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது.



தொடர் 03...



மேல் மாடியில் மஹிந்தவின் அறை.அங்கு யாரும் போவதில்லை. ஆனால், அதற்குள்ளும் மக்கள்.
எதையும் உணர முடியாத தருணம்..
போகக்கூடிய அறை–போகக்கூடாது அறை என்ற வித்தியாசமெல்லாம் தெரியாது அவர்களுக்கு...
உயிரைக் காப்பது ஒன்றே பிரதானம்.
அதற்காக எங்கெல்லாம் செல்ல முடியுமோ அங்கெல்லாம் செல்கிறார்கள்.
இதனால் மஹிந்தவின் உயிருக்கே ஆபத்து.மஹிந்தவின் எதிரிகள் நுழைந்திருந்தால்...? என்ன செய்வது?
தடுமாறுகிறார்கள் பாதுகாப்பு அதிகாரிகள்.
அலரிமாளிகைக்கு வெளியே நிலைமை மோசம்.சுற்றி நிற்கிறார்கள் மக்கள்.மாளிகைக்குள் நுழைவதற்கு...
அலரி மாளிகைக்குள் நுழைவதற்கு 3 பிரதான வழிகள்.அந்த வழிகளின் முன்பாக மக்கள்.
நிறைந்து நிற்கிறார்கள். உள்நுழைவதற்கு.. உள்நுழைந்து தாக்குவதற்கு..
ஒவ்வொரு கதவுக்கு முன்பாகவும் இரண்டு வீதித் தடைகள். உடைத்தெறிகிறார்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள் அவற்றையெல்லாம்...
போராடுகிறார்கள் பாதுகாப்பு படையினர்.தடுக்கிறார்கள் அவர்களை நுழையவிடாமல்...



# அலறி மாளிகைக்குள் அன்றிரவு

## பெய்ரா வாவி பகுதியில் தாக்குதல்:

பஸ்கள் மீண்டும் அலறி மாளிகைக்குள்:
உடனடியாகத் திருப்பி அழைத்த மஹிந்த
அப்போது அலறி மாளிகையில் இருந்து வெளியேறுகின்றன பஸ்கள்.
பின் வழியாக...பெய்ரா வாவி வழியாக...
கூட்டத்துக்கு வந்தவர்களும் தாக்குதல் நடத்திய காடையர்களும் அந்த பஸ்களில்...
அவற்றை மறைக்கிறார்கள் மக்கள். தாக்குகிறார்கள் அந்த பஸ்களை...
தகவல் கிடைக்கிறது மஹிந்தவுக்கு...
“கதவத் திறங்க.. பஸ் எல்லாத்தையும் உள்ளுக்க எடுங்க....அவங்க எங்கட மக்கள்.காப்பாத்தணும்...“
பதறுகிறார் மஹிந்த.உத்தரவிடுகிறார் அங்கிருந்தவர்களிடம்...
அவ்வாறே நடக்கின்றன...
முன் சென்ற பஸ்கள் சில சிக்க...பின் சென்ற பஸ்கள் வருகின்றன பின்னோக்கி...
அதிகமான மக்கள் அந்த பஸ்களில்.... 500 இற்கு மேல்...
மஹிந்தவின் தனி அறைகளிலும் மக்கள்...

## அவரது உயிருக்கு அச்சுறுத்தல்...

உள்நுழைகிறார்கள் மக்கள். யார் வருகின்றார்கள் என்றே தெரியவில்லை.
இதனால் பாதுகாப்பு பிரச்சினை அங்கு. பாதுகாப்பு அதிகாரிகள் தடுமாற்றம்..
எல்லோருக்கும் மரண பயம். ஒரே பதட்டம்.
தாக்குதல்தாரிகள் உள்ளே நுழைந்துவிடுவார்களோ என்ற அச்சம்.
எல்லா இடங்களிலும் மக்கள். மாளிகைக்கு உள்ளே...
எனி அறைகள்–மஹிந்தவின் கதிரை–மேசை இப்படி எல்லா இடங்களிலும்...
மேல் மாடியில் மஹிந்தவின்



அறை.அங்கு யாரும் போவதில்லை. ஆனால்,அதற்குள்ளும் மக்கள்.
எதையும் உணர முடியாத தருணம்..
போகக்கூடிய அறை–போகக்கூடாது அறை என்ற வித்தியாசமெல்லாம் தெரியாது அவர்களுக்கு...
உயிரைக் காப்பது ஒன்றே பிரதானம்.
அதற்காக எங்கெல்லாம் செல்ல முடியுமோ அங்கெல்லாம் செல்கிறார்கள்.
இதனால் மஹிந்தவின் உயிருக்கே ஆபத்து.மஹிந்தவின் எதிரிகள் நுழைந்திருந்தால்...? என்ன செய்வது?
தடுமாறுகிறார்கள் பாதுகாப்பு அதிகாரிகள்.
அலரிமாளிகைக்கு வெளியே நிலைமை மோசம்.சுற்றி நிற்கிறார்கள் மக்கள். மாளிகைக்குள் நுழைவதற்கு...
அலரி மாளிகைக்குள் நுழைவதற்கு 3 பிரதான வழிகள்.அந்த வழிகளின் முன்பாக மக்கள்.
நிறைந்து நிற்கிறார்கள். உள்நுழைவதற்கு..உள்நுழைந்து தாக்குவதற்கு..
ஒவ்வொரு கதவுக்கு முன்பாகவும் இரண்டு வீதித் தடைகள்.உடைத்தெறிகிறார்கள் ஆர்ப்பாட்டக்காரர்கள் அவற்றையெல்லாம்...
போராடுகிறார்கள் பாதுகாப்பு படையினர்.தடுக்கிறார்கள் அவர்களை நுழையவிடாமல்...

## ஜனாதிபதி தொடர் அழுத்தம்... கவலையோடு விலகுகிறார் மஹிந்த...

நாடு பூராகவும் கலவரம்.பற்றிப் பிடிக்கிறது வேகமாக.பற்றி எரிகின்றன வீடுகள்.எம்பிக்களின் வீடுகள்.
எதிர்பார்த்ததைவிட மோசம்.



தலையில் கை வைக்கிறார்கள் அரச எம்பிக்கள்.கோத்தா ஆதரவு எம்பிக்கள்.
இதற்காகத்தானே கத்தினோம்... இதற்காகத்தானே வேண்டாம் என்றோம்.
புலம்புகிறாரார்கள்.... என்ன செய்வது...? எப்படித் தடுப்பது...?
தலைக்குமேல் வெள்ளம்.கட்டுப்படுத்த முடியவில்லை.எங்கும் கலவரம்.
திரும்பும் பக்கமெல்லாம் தீ...தீ...தீ...
பற்றி எரிகின்றன வீடுகள்–வாகனங்கள்.
சாம்பலாகின்றன அரசியல்வாதிகளின் சொத்துக்கள்.கண்முண்ணே...
எப்படித் தணிப்பது...? எப்படி நிறுத்துவது...?
இப்போதாவது மஹிந்த மாற வேண்டும். தீர்மானத்தை மாற்ற வேண்டும்.பதவி விலக வேண்டும் .உடன் விலக வேண்டும்.
தொடர் அழுத்தம்.ஜனாதிபதியிடம் இருந்து...
வருகிறது செய்தி.ஒன்றன் பின் ஒன்றாக...
““உடனே விலகுங்கள்.கலவரத்தைத் தடுக்க இதுதான் வழி...““
இனி முடியாது.விலகியே ஆக வேண்டும்.
பறக்கிறது இராஜினாமா கடிதம். மஹிந்தவிடம் இருந்து ஜனாதிபதிக்கு...
உடனே அறிவிக்கப்படுகிறது அந்தச் செய்தி.
இருந்தும்,தணிவதாக இல்லை கலவரம்.
அதிகரிக்கிறதே தவிர குறைவதாக இல்லை.
ஒரு புறம் கலவரம்.மறுபுறம் கவலை.
மஹிந்தவுக்குத்தான் அந்தக் கவலை.இராஜினாமா செய்ததால் வந்த கவலை.
2015 இல் தோல்வியுற்றபோதுகூட இப்படிக் கவலைப்பட்டதில்லை அவர்.
இந்த நிலைமையிலும்கூட...பதவியை விட மனமில்லை அவருக்கு...



## மஹிந்தவின் அச்சத்தை நீக்கிய பட்டாசு வெடில்

இரவாகிவிட்டது.ஆனால்,நிலைமை மோசம்.அலரிமாளிகையின் நிலைமை.
எந்நேரமும் ஆர்ப்பாட்டக்காரர்கள் நுழையலாம்.எதுவும் நடக்கலாம். மஹிந்தவின் உயிரையும் பறிக்கலாம்.
மாளிகையைச் சுற்றி ஆர்ப்பாட்டக்காரர்கள். பெரும் கோசத்தோடு...
பாதுகாப்பும் அவ்வளவு இறுக்கமில்லை...
இப்போது அடுத்த சம்பவம். அனைவரையும் அச்சத்தில் உறைய வைக்கும் சம்பவம்.
அது...?
பற்றி எரிகிறது ஒரு கதவு.ஆம்...தீ வைத்துவிட்டார்கள்.
அத்தோடு விடவில்லை.உடைக்கிறார்கள் கதவை. உள்நுழைவதற்காக...
பலமாகக் கேட்கிறது அந்தச் சத்தம். கதவை உடைக்கும் சத்தம்.
தூக்கிப்போடுகிறது உள்ளே இருப்பவர்களை...
அதிகரிக்கிறது அச்சம்.
நுழைந்துவிடுவார்களோ...!!! அடித்துக் கொன்றுவிடுவார்களோ...!!!
மஹிந்தவின் காதுகளிலும் அந்தச் சத்தம்.வீழ்கிறது பலமாக...
விசாரிக்கிறார்.
““என்ன அது...என்ன சத்தம்...?““
அருகில் உதயங்க வீரதுங்க. பதிலளிக்கிறார் உண்மையை மறைத்து..
மஹிந்த கலவரமடைவார் என்பதால்...
“அது பட்டாசு வெடில் சுடும் சத்தம்...
மீண்டும் கேட்கிறார் மஹிந்த.
“ஏன்...பட்டாசு சுடுகிறார்கள்... நான் பதவி விலகியதற்காகவா...?“
இருக்கலாம் என்கிறார் உதயங்க...
பல எம்பிக்கள் அங்கே. மஹிந்தவுக்கு அருகில்...அவருக்கு ஆறுதலாக...

தொடரும்....

(ஊடகவியலாளர் எம்.ஐ.முபாறக்)





- அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான நல்ல சந்தர்ப்பம் இதுவென்று நினைத்து செயற்படுகிறீர்களா?
- ரணில் விக்ரமசிங்க அரசமைப்பின்படிதானே ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.அதை ஏன் நீங்கள் எதிர்க்கிறீர்கள்?
- பொருளாதார பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருவதாக நீங்கள் நினைக்கிறீர்களா?
- மக்கள் இப்போது உங்கள் பக்கம் நிற்பதற்கு காரணம்.அரசுமீது உள்ள கோபம் காரணமாகவே அன்றி உங்கள் கொள்கையை ஏற்று அல்ல என்று சொல்லப்படுகிறதே ?
- தமிழர்களின் பிரச்சினைகளுக்கு 13 ஆம் திருத்தத்தின் ஊடாக–மாகாண சபைகளின் ஊடாக தேர்வைப் பெற முடியும் என்று நீங்கள் நம்புகிறீர்களா?

# அனுர ஜனாதிபதியாகி இருந்தால்...???

**இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கியுள்ளார் ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க.**

**கேள்வி: அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான நல்ல சந்தர்ப்பம் இதுவென்று நினைத்து செயற்படுகிறீர்களா?**

**பதில் :** கடந்த வருடம் மார்ச் மாதம் உள்ளூராட்சி சபைகளின் ஆட்சிக்காலம் முடிவுக்கு வந்தது.தேர்தலை நடத்தாமல் அமைச்சர் எந்தவொரு காரணமும் இன்றி தேர்தலை ஒரு வருடத்துக்கு ஒத்திப்போட்டார்.

நாங்கள் அப்போது அதனோடு மோதவில்லை.இந்த மாதம் அது முடிகிறது.இனி அரசமைப்பின்படி– உள்ளூராட்சி சட்டத்தின்படி– தேர்தலை நடத்தியாக வேண்டும்.

தேர்தல் வேண்டும் என்பது எங்களது நிகழ்ச்சித் திட்டம் அல்ல.அரசமைப்பின்படி நடத்தியே ஆக வேண்டும்.அதுதான் ஜனநாயகம்.

தேர்தலை நடத்தாமல் இருப்பதற்குக் காரணம் பணம் இல்லாமை இல்லை.ஜேவிபியின் எழுற்சியைக் கண்டு அஞ்சுகிறார்.அதைத் தடுக்க அவர் முயற்சிக்கிறார்.

**கேள்வி :** ரணில் விக்ரமசிங்க அரசமைப்பின்படிதானே ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார்.அதை ஏன் நீங்கள் எதிர்க்கிறீர்கள்?

**பதில் :** ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாவுக்கு மக்கள் வாக்களித்தது ரணிலுக்கு எதிராக–ரணிலை விரட்டுவதற்காக.

அப்படிப்பட்ட ரணிலை கோத்தாவின் இடத்துக்கு நியமிப்பதை மக்கள் ஏற்கமாட்டார்கள்.

**கேள்வி : அந்தத் தேர்தலில் நீங்களும் போட்டியிட்டீர்கள். ஒருவேளை வெற்றிபெற்றிருந்தால்...?**

**பதில் :** நான் ஜனாதிபதியாகி இருந்தால் நாடாளுமன்றத்தைக் களைத்து மக்கள் நிலைப்பாட்டை அறிந்திருப்பேன்.மக்கள் அவர்கள் விரும்பிய ஆட்சியைத் தெரிவு செய்வதற்கு இடம்கொடுத்திருப்பேன்.

நாடாளுமன்றத் தேர்தலின் மூலம் மக்கள் ஆணை யாருக்கு அதிகமாக இருக்குமோ அவரை ஜனாதிபதியாக நியமித்துவிட்டு நான் ஜனாதிபதி பதவியில் இருந்து விலகி இருப்பேன்.

இவ்வாறு கூறித்தான் நான் போட்டியிட்டேன்.

**கேள்வி : 2019 ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் ரணிலுக்கு வாக்களிக்காததால் அவர் மக்களை பழிவாங்குகிறார் என்று கூறுகிறீர்கள். அது உண்மைதானா?**

**பதில் :** ஜனாதிபதி பதவி என்பது ரணிலுக்கு பரம்பரை பரம்பரையாக உரித்தான சொத்து என்று அவர் நினைக்கிறார்.அது மக்களின் ஆணையின் ஊடாகக் .கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர் இல்லை.

77 இல் இருந்து 2020 வரை மக்கள் அவருக்கு அரசியல் ஆணை வழங்கினர். அதன் பின் மக்கள் அவரை விரட்டினர்.

அவர் ஒருபோதும் நினைக்கவில்லை அவரை மக்கள் இவ்வாறு விரட்டுவார்கள் என்று.இதனால் அவருக்கு மக்கள்மீது குறிப்பாக,கொழும்பு மக்கள்மீது கடும் கோபம் உண்டு.

அந்தக் கோபத்தை அவர் வெளிக்காட்டி வருகிறார்.நான் இரண்டு உதாரணங்களை கூறுகிறேன்.அதில் ஒன்றுியல வயஒ.

இதனால் சம்பளத்தில் அரைவாசியை அரசு வரி என்ற பெயரில் பறித்துக்கொள்கிறது.அவர்களின் வாழ்க்கையை நாசமாக்க வேண்டும் என்பதே அவரது திட்டம்

உயர்தர பரீட்சை ஆரம்பமாகும்போதே மின்வெட்டை நிறுத்துமாறு மக்கள் அரசிடம் கேட்டனர். மறுத்துவிட்டது.

பெப்ரவரி 16 ஆம் திகதி மின் கட்டணத்தை அதிகரித்து மின்வெட்டை மறுநாள் 17ஆம் திகதி நிறுத்தியது அரசு.இதனூடாகவும் ரணில் மக்களை பழிவாங்கினார்.

பெப்ரவரி 17 ஆம் திகதிதான் உயர்தர பரீட்சை முடிவடைந்தது.அன்றைய தினம்தான் அரசு மின்வெட்டை நிறுத்தியது.

ரணில் மாணவர்களை எப்படி பழிவாங்கினார் என்பது இதன்மூலம் தெளிவாகத் தெரிகிறது.

**கேள்வி :** ஏன் மாணவர்களை பழிவாங்கினார்? அவர்கள் வாக்களிக்கவில்லையே யாருக்கும்..

**பதில் :** இல்லை.உங்களது அம்மாமார்,அப்பாமார் என்னை விரட்டினார்கள்.நீங்கள் துன்பத்தை அனுபவியுங்கள் என்பதுதான் ரணிலின் அந்தச் செய்தி.

**கேள்வி : எந்தவொரு அரசியல்வாதியும் தனக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி மக்கள் ஆணையைப் பெறுவதற்கல்லவா முயற்சி செய்வார்?**

**பதில் :** அவருக்கு அப்படியொரு திட்டமில்லை.அப்படி இருந்தால் அவர் தேர்தலை நடத்துவார்.தேர்தலையும் நடத்தாமல் மக்களை பழிவாங்குவதே அவரது திட்டம்.

தேவையென்றால் தேர்தல் நெருங்கும்போது மின்கட்டணம் போன்றவற்றைக் குறைத்துக் காட்டி மக்களுக்கு நிவாரணம் வழங்கியதாக சொல்லி தேர்தலுக்குச் செல்வார்.

**கேள்வி : பொருளாதார பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துவருவதாக நீங்கள் நினைக்கிறீர்களா?**

**பதில் :** அப்படி எதுவும் இல்லை. அப்படி இருந்திருந்தால் நிலக்கரி மோசடி இடம்பெற்றிருக்காது.சுதந்திர தின நிகழ்வுக்கு கோடிக்கணக்கில் பணத்தை ரணில் விரயமாக்கி இருக்கமாட்டார்.லட்ச கணக்கில் சம்பளம் கொடுத்து அதிகமான ஆலோசகர்களை நியமித்திருக்கமாட்டார்.

உண்மையில் பொருளாதாரப் பிரச்சினையில் இருந்து மீள்வதாக இருந்தால் முதலில் மக்கள் ஆணை பெற்ற ஆட்சி உருவாக வேண்டும்.

உலகில் பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்த நாடுகள் எல்லாம் தலை நிமிர்ந்தது புதிய ஆட்சியின் ஊடாகத்தான்.

அப்படி இல்லாமல் திருடர்களை பாதுகாத்துக்கொண்டு,திருடர்கள் தொடர்ந்தும் திருடுவதற்கு இடம் கொடுத்துக்கொண்டு எப்படி இவர்களால் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியும்?

இதனால் மக்கள் ஆணை பெற்ற ஆட்சி தேவை என்பது நிலைப்பாடாகும்.

**கேள்வி : மக்கள் இப்போது உங்கள் பக்கம் நிற்பதற்கு காரணம்.அரசுமீது உள்ள கோபம் காரணமாகவே அன்றி உங்கள் கொள்கையை ஏற்று அல்ல என்று சொல்லப்படுகிறதே ?**

**பதில் :** பிரதான கட்சிகள் இடையில் இருக்கின்ற பிரதான குற்றச்சாட்டுத்தான் ஊழல்,மோசடி.இதை ஒழிக்க வேண்டும் என்றால் அதற்கு எதிராக தரப்பு ஒன்று வரவேண்டும்.

திருட்டு எதிரான–திருடர்களை தண்டிக்கின்ற–திருடர்களின் சொத்துக்களை அரசுடமை ஆக்குகின்ற ஆட்சியாளர்கள் வேண்டும்.அவர்கள்தான் நாம்.

இதற்கு மேலதிகமாக பொருளாதாரரீதியில் சீரழிந்த நாட்டை ஏற்க வேண்டுமா இல்லையா என்ற கேள்வி.

ஆம். சீரழித்தவர்களால் ஒருபோதும் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியாது. அதைப் புது நிர்வாகம் கையேற்க வேண்டும்.

நாம் கையேற்றால் எப்படி பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவோம் என்ற திட்டத்தை முக்கியான வர்த்தக சமூகத்திடம் வெளிப்படுத்தியுள்ளோம்.

**கேள்வி : தமிழர்களின் பிரச்சினைகளுக்கு 13 ஆம் திருத்தத்தின் ஊடாக-மாகாண சபைகளின் ஊடாக தேர்வைப் பெற முடியும் என் று நீங்கள் நம்புகிறீர்களா?**

**பதில் :** இருக்கின்ற 13 இன் ஊடாகவோ– அதில் அதிகாரத்தைக் கூட்டியோ– குறைத்தோ இந்தப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்க முடியாது.

அனைத்து இன மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய புதிய அரசமைப்பின் ஊடாகவே நிலையான–சரியான தீர்வைப் பெற முடியாது.

தெற்கு மக்கள் நிராகரிக்கும் தீர்வு ஒருபோதும் தமிழர்களுக்கான தீர்வாக அமையாது என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் கூறியுள்ளார்.

**கேள்வி : பல தடவைகள் பல கட்சிகளுடன் கூட்டணி அமைத்து அவர்களை ஆட்சிக்குக் கொண்டுவருவதற்கு பாடுபட்டுள்ளீர்கள். அப்படியானால்,அவர்கள் செய்த பிழைகளுக்கும் நீங்கள் பொறுப்பு அல்லவா?**

**பதில் :** அந்தந்த காலப்பகுதியில் ஏற்படவிருந்த அழிவுகளைத் தடுப்பதற்காக நாம் அப்படி கூட்டணி அமைத்தோம். ஆனால்,அவர்களின் ஊழல்,மோசடிகளுக்கு துணை போனதில்லை நாங்கள்.–என்றார்.

ஜனாதிபதி பதவி என்பது ரணிலுக்கு பரம்பரை பரம்பரையாக உரித்தான சொத்து என்று அவர் நினைக்கிறார்.அது மக்களின் ஆணையின் ஊடாகக் .கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அவர் இல்லை.

77 இல் இருந்து 2020 வரை மக்கள் அவருக்கு அரசியல் ஆணை வழங்கினர்.அதன் பின் மக்கள் அவரை விரட்டினர்.அவர் ஒருபோதும் நினைக்கவில்லை அவரை மக்கள் இவ்வாறு விரட்டுவார்கள் என்று.இதனால் அவருக்கு மக்கள்மீது குறிப்பாக,கொழும்பு மக்கள்மீது கடும் கோபம் உண்டு.

அந்தக் கோபத்தை அவர் வெளிக்காட்டி வருகிறார்.நான் இரண்டு உதாரணங்களை கூறுகிறேன். அதில் ஒன்றுியல வயஒ.இதனால் சம்பளத்தில் அரைவாசியை அரசு வரி என்ற பெயரில் பறித்துக்கொள்கிறது.அவர்களின் வாழ்க்கையை நாசமாக்க வேண்டும் என்பதே அவரது திட்டம்

உயர்தர பரீட்சை ஆரம்பமாகும்போதே மின்வெட்டை நிறுத்துமாறு மக்கள் அரசிடம் கேட்டனர். மறுத்துவிட்டது.

பெப்ரவரி 16 ஆம் திகதி மின் கட்டணத்தை அதிகரித்து மின்வெட்டை மறுநாள் 17ஆம் திகதி நிறுத்தியது அரசு.இதனூடாகவும் ரணில் மக்களை பழிவாங்கினார். பெப்ரவரி 17 ஆம் திகதிதான் உயர்தர பரீட்சை முடிவடைந்தது.அன்றைய தினம்தான் அரசு மின்வெட்டை நிறுத்தியது.ரணில் மாணவர்களை எப்படி பழிவாங்கினார் என்பது இதன்மூலம் தெளிவாகத் தெரிகிறது.



# மதில் மேலால் பாய்ந்து பாடசாலைக்கு சென்ற ரணில்

கொழும்பு ரோயல் கல்லூரியின் நிகழ்வு ஒன்று அண்மையில் ஹில்டன் ஹோட்டலில் இடம்பெற்றது.பிரதம அதிதியாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்துகொண்டார்.

நிகழ்வின் பின் சிறிது நேரம் அவர் அவரது பழைய நண்பர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தார்.

அப்போது அவர்கள் பாடசாலைக் காலத்தையும் மீட்டிப் பார்த்தனர்.

பாடசாலைக் காலத்தில் ரணில் படுசுட்டியாக இருந்ததையும் மதில் மேலால் பாய்ந்து பாடசாலைக்குச் சென்றதையும் ரணில் அங்கு நினைவுகூர்ந்தார்.

ஒரு தடவை அவ்வாறு நண்பர்களுடன் சேர்ந்து மதில் மேலால் பாய்ந்து உள்ளே சென்றபோது ஆசிரியரிடம் சிக்கி அவர் உள்ளிட்ட நண்பர்கள் தண்டிக்கப்பட்டதையும் பாடசாலைக்கு வெளியே அனுப்பப்பட்டதையும் அங்கு கூறி சிரித்து மகிழ்ந்தார் ஜனாதிபதி.

# யார் அந்த எம்பிக்கள்?



தினேஷ் குணவர்தனவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கிவிட்டு மஹிந்தவை பிரதமராக்குவதற்காக மஹிந்த தரப்பு சன்ன ஜயசுமணவிடம் ஆதரவைக் கோரினர் என்று கதை பரவி பரபரப்பை ஏற்படுத்தியது.

இதை மொட்டு கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் மறுத்துள்ளார்.

இதன் உண்மைத் தன்மையை அறிவதற்காக டலஸ் அழகப்பெரும சன்னவைத் தொடர்புகொண்டு வினவினார்.

அவர் நடந்ததை விவரித்தார். சன்னவோடு தொடர்பு கொண்டு ஆதரவைக் கோரிய இரண்டு எம்பிக்களின் பெயர்களையும் அவர் கூறினார்.

யார் அந்த எம்பிக்கள்?

## அனுர வாங்கிக்கட்டியதுபோல்...



ஜேவிபியின் ஆர்ப்பாட்டத்தை பொலிஸார் கண்ணீர் புகை கொண்டு கலைத்தார்கள் அல்லவா.அப்போது ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க கடை ஒன்றுக்குள் புகுந்தார்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்று அடுத்த நாள் ஜனாதிபதியின் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் இடம்பெற்றது.

கூட்டம் முடிந்து ஜனாதிபதியுடன் உரையாடிக்கொண்டிருந்த அமைச்சர்கள் இந்தச் சம்பவத்தை ஜனாதிபதியிடம் கூறினர்.

அதைக் கேட்டு சிரித்த ஜனாதிபதி வரலாற்றில் இடம்பெற்ற இதுபோன்ற ஒரு சம்பவத்தை நினைவுபடுத்தினார்.

80 களின் ஆரம்பத்தில் லங்கா சமசமாஜ கட்சி ஹைட் பார்க்கில் வீதிகளை மறைத்து ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது.

இதுபோன்றே பொலிஸார் ஆர்ப்பாட்டத்தை அடித்துக் கலைத்தனர்.அதில் கலந்துகொண்ட கொல்வின் ஆர். டி .சில்வா கடுமையாகத் தாக்கப்பட்டார்.

அவரது காலில் காயம் ஏற்பட்டது.அதனால் ஏற்பட்ட பாதிப்பு கொல்வின் மரணிக்கும்வரை இருந்தது என்று கூறினார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க.

## ஜே.ஆர்,கொல்வின், பிலிப் அப்படித்தான்



04டீ-அந்த உரையாடலில் அமைச்சர்கள் பந்துல குணவர்தன,பிரசன்ன ரணதுங்க,மனுஷ நாணயக்கார ஆகியோரும் இணைந்துகொண்டனர்.

““ஓம் சேர்..அந்தச் சம்பவம் எனக்கும் தெரியும்.கொல்வின்,பிலிப்,ஜே. ஆர் எல்லோரும் மக்களுடன் சேர்ந்து உயிரை விடுவதற்கும் தயாராக இருந்தார்கள்.பழைய இடதுசாரித் தலைவர்கள் அப்படித்தான்.அடி விழும்போது மக்களை விட்டுவிட்டு ஓடவில்லை...““ என்றார் பந்துல.

ஓம்..ஓம்.. இப்போதைய இடதுசாரி தலைவர்கள் அடி வீழ்ந்ததும் கடைக்குள் போய் ஒளிந்துகொண்டு வெளியே வந்து வீரர்கள்போல் பேசுகிறார்கள் என்றார் பிரசன்ன ரணதுங்க.

நோயாளிகளை ஆர்ப்பாட்டன்களுக்கு அழைத்து வருவது பிழை.கொல்வின் உயிரோடு இருந்திருந்தால் அனுராவுக்குப் பாடம் நடத்தி இருப்பார் என்றார் மனுஷ.

## துப்பறிவாளன்

## கிளிண்டனும் பீரிஸும்





ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்படுவதற்கு சொல்லப்பட்ட காரணம் அவருக்கு சர்வதேச தொடர்பு அதிகம் என்பதுதான்.

அவர் அந்தத் தொடர்பைப் பயன்படுத்தி பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்ப்பார் என்று ரணிலுக்கு ஆதரவானவர்கள் கூறினார்கள்.

சர்வதேச தொடர்பு இருப்பதுதான் ஜனாதிபதியாவதற்கான-கட்சியின் தலைவராவதற்கான தகுதி என்றாகிவிட்டது இப்போது.

இதனால் ஒவ்வொரு கட்சியும் அவரவர் கட்சிகளின் தலைவர்களின் திறமை-சர்வதேச தொடர்புபற்றி பேசத் தொடங்கியுள்ளனர்.

அந்த வகையில் டலஸ் தரப்பு அவர்களின் கட்சியின் முக்கியஸ்தர் ஜீ.எல் பீரிஸ் பற்றி ஒரு தகவலைத் தெரிவித்துள்ளது.

அவருக்கும் அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டனுக்கும் இடையில் நல்ல தொடர்பு உண்டாம். அவர்கள் இருவரும் பல்கலைக்கழக நண்பர்களாம்.

## முட்டைக்கு லஞ்சம்





ஐக்கிய மக்கள் சக்தி அசோக அபயசிங்க கடந்த வாரம் தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்வதற்குத் தயாரானார்.

அப்போது அவருக்குத் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது.அவர் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ளப்போவதை அறிந்த நபர் அவர்.

அவர் எம்பியிடம் ஒரு தகவலை தெரிவித்தார்.அந்தத் தகவலை அந்த நிகழ்ச்சியில் கூறுமாறு சொன்னார்.

அது முட்டை இறக்குமதி தொடர்பான செய்தி.லஞ்சம் தொடர்பான செய்தி.

வெளிநாடுகளில் இருந்து முட்டை இறக்குமதி செய்வதைத் தடுக்க வேண்டுமென்றால் கோடிக்கணக்கில் தனக்கு லஞ்சம் வேண்டுமென அரச அதிகாரி ஒருவர் ஒரு கோழிப் பண்ணையாளரிடம் கேட்டாராம்.

அந்தத் தகவலைதான் அந்த நபர் எம்பியிடம் கூறினார்.

அவரும் அப்படியே அந்தத் தகவலை அந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கூறிவிட்டார்.

## விமானத்திலேயே டிஸ்கஷன்

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கொரியாவில் இடம்பெற்ற உலக சமாதான மாநாட்டில் கலந்துகொள்வதற்காக சில நாட்களுக்கு முன் அங்கு சென்றிருந்தார்.

அவருடன் ஷான் விஜயலால் எம்பியும் உடன் சென்றிருந்தார்.

போகும்போதும் வரும்போதும் அவர்கள் இருவரும் ஒரு முக்கியமான விடயத்தை விமானத்தில் டிஸ்கஸ் பண்ணினங்களாம்.

அது என்ன தெரியுமா?

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடப் போவதாக மைத்திரி கூறியுள்ளார் அல்லவா.

அதைப்பற்றித்தான் டிஸ்கஸபனாம்

அப்ப கென்டஸ்ட் பண்றது உண்மதான்போல...

எம்.எல்.எஸ்.முஹம்மத்
lk.mlsmohamed@gmail.com



# ஆட்சி மாற்றங்களால் விரயமாகும் மக்கள் பணம்!

எனது மகன் அஹ்மத் யூனுஸ் இயல்பிலேயே ஒரு திறமைசாலி.எப்போதும் எதனையும் வித்தியாசமாகவும் புதிய கோணத்திலும் நோக்க முயற்சிப்பவன்.நான் நடத்தி வந்த முன் பள்ளியில் கல்விப் பயணத்தை ஆரம்பித்த அவன் குழந்தைப் பருவத்திலிருந்தே ஆக்க செயற்பாடுகளிலும் தொழிநுட்பம் சார்ந்த விடயங்களிலும் மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தான்.

தனது 8 ஆம் வயதிலேயே தந்தையை இழந்த மகன் அஹ்மதிற்கு ஆகாயத்தில் பறக்கும் விமானங்கள் தொடர்பில் அலாதியான ஒரு பிரியம் இருந்தது.எனது அலைபேசியை பயன்படுத்தி வானில் பறக்கும் விமானங்களை படமெடுத்து அது பற்றிய கேள்விகளை ஒன்றன் பின் ஒன்றாக கேட்க ஆரம்பிப்பான்.

அல்மக்கியா முஸ்லிம் மகா வித்தியாலயாத்தில் தரம் ஒன்பதில் படித்துக் கொண்டிருந்த மகன் அஹ்மத் பாடசாலை மட்ட இளம் கண்டு பிடிப்பாளர் மற்றும் புத்தாகுநர் போட்டிகள் உட்பட அனைத்து ஆக்கப் போட்டிகளிலும் பங்கேற்று தனது தொழிநுட்பத் திறமையை நிரூபித்துக் கொண்டிருந்தான்.இதனால் அவன் எதிர்காலத்தில் தான் ஒரு விமான இயந்திரவியலுடன் தொடர்பான தொழிநுட்பவியலாளராக வர வேண்டுமென மனதில் ஆசைப்பட்டுக் கொண்டிருந்தான்.

க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் மிகத் திறமையாக சித்தி அடைந்த மகன் அஹ்மத் தொழிநுட்பப் பிரிவில் உயர் தரக் கல்வியை தொடர்வதன் மூலம் தனது இலக்கு நோக்கி பயணிக்க முடியுமென எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் அதற்கான பௌதிக வளங்கள் எதுவும் காணப்படவில்லை.மாவனல்லை மற்றும் பேருவலை ஹற்றன் போன்ற ஒருசில தூரப் பிரதேசங்களில் மாத்திரம் இதற்கான வாய்ப்புக்கள் காணப்பட்ட போதிலும் எமது பொருளாதார நிலையும் குடும்பச் சூழ்நிலைகளும் அஹ்மதை வெளி ஊர் பாடசாலைகளுக்கு அனுப்பி கற்பிப்பதற்கு இடம் கொடுக்க மறுத்தது.

இதனால் மகன் அஹ்மத் தொழிநுட்ப பிரிவில் உயர் தரக் கல்வியை தொடரும் எதிர்பார்ப்பை கைவிட்டு விட்டு இரத்தினபுரி தொழிநுட்பக் கல்லூரியில் இணைந்து வாகன இயந்திரவியல் தொழிநுட்பப் பாடநெறியை தொடர ஆரம்பித்தான். தொழிநுட்ப அறிவை மேம்படுத்தும் நோக்குடன் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட மஹிந்தோதய ஆய்வு கூடங்களையும் தொழிநுட்ப பீடங்களையும் தேவைமிக்க பாடசாலைகளுக்கு அரசு வழங்கியிருந்தால் எனது மகன் போன்ற பலர் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியிருக்க மாட்டார்கள் என அஹ்மத்தின் தாய் ஆசிரியை ஸ ராஜிதா பேகம் தெரிவிக்கிறார்.

தகவல் அறியும் சட்டமூலத்திற்கிணங்க சபரகமுவ மாகாண கல்வி அமைச்சுடமிருந்து கிடைக்கப் பெற்றுள்ள தரவுகளின் அடிப்படையில் மஹிந்தோந்தய ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் மஹிந்தோந்தய ஆய்வு கூடங்கள் இம்மாகாணத்திலுள்ள 21 பாடசாலைகளுக்கும்,தொழிநுட்ப பீடங்கள் 2 பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் பல கோடி ரூபா செலவில் மஹிந்தோந்தய ஆய்வுகூடங்களையும் தொழில் நுட்ப பீடங்களையும் பாடசாலைகளில் திறந்து வைத்த போதிலும் சபரகமுவ மாகாணத்தில் மாத்திரம் 9 பாடசாலைகளில் இக்கட்டிடங்கள் இன்று உரிய தேவைகளுக்காக பயன்படுத்தப் படவில்லையெயன தேசிய கணக்காய்வு அறிக்கை 2021 குறிப்பிடுகிறது.அத்துடன் தெஹியோவிட்ட வலயத்திலுள்ள இரண்டு தேசிய பாடசாலைகள் உட்பட நான்கு பாடசாலைகளின் அமைக்கப்பட்டுள்ள மஹிந்தோந்தய கட்டிடங்களில் ஆரம்பப் பிரிவு வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருவதாக மாகாண கல்வித் திணைக்களம் அறிவிக்கிறது.

இதே போன்று கேகாலை மாவட்டத்திலுள்ள தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயத்திற்கு நிர்மாணித்துக் கொடுக்கப்பட்ட மேற்படி மஹிந்தோந்தய ஆய்வுகூடம் மண்சரிவு அனர்த்த பாதிப்புக்குள்ளாகியுள்ளதால் அக்கட்டிடம் முழு அளவில் கைவிடப்பட்டுள்ளது என அப்பாடசாலையின் பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

21 ஆம் நூற்றாண்டில் ஏற்பட்டு வரும் புதிய அறிவியல் மாற்றங்களையும் தொழிநுட்ப சவால்களையும் தைரியமாக எதிர் கொள்ளும் வகையிலான மாணவர் தலைமுறையை உருவாக்கும் நோக்குடன் கல்வித் துறையில் பாரிய முதலீடுகளும் சர்வதேச நிதி நிறுவனங்களின் அன்பளிப்புக்களும் கடன் உதவிகளும் கிடைக்கப் பெற்றுக் கொண்டிருக்கிறது.இதற்கிணங்க பதவிக்கு வரும் ஆட்சியாளர்களும் கல்வி தொடர்பான பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உட்பட பல சர்வதேச நாடுகளின் நிதி உதவிகளை பெற்றுக் கொள்கின்றனர்.

2010 ஆம் ஆண்டில் இரண்டாம் தடவையாகவும் ஆட்சி பீடம் ஏறிய மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் 1000 பாடசாலைகள் அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் 2012 ஆண்டு வரவு செலவு திட்டத்தின் ஊடாக ரூபா 2.5 பில்லியன்களை பெற்றுக் கொண்டது.அத்துடன் பல்வேறு துணை செயற்திட்டங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட மஹிந்தோந்தய தொழிநுட்ப ஆய்வு அபிவிருத்தி மற்றும் மஹிந்தோந்தய தொழிநுட்ப பீடம் தொடர்பான அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி 1.7 பில்லியன் ரூபாக்களை கடனுதவியாக வழங்கியது.

இதே போன்று 2015 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த அரசு மஹிந்த ராஜபக்ச அரசாங்கம் ஆரம்பித்திருந்த பாடசாலை பௌதிக வள அபிவிருத்தி திட்டங்களை இடை நிறுத்தியதுடன் “அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை” எனும் புதிய செயற் திட்ட மொன்றை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்க ஆரம்பித்தது.இச்செயற்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 200 பாடசாலைளில் பௌதிக வள அபிவிருத்தியை முன்னெடுப்பதற்கென ரூபா.65 மில்லியன்களை அரசு பயன் படுத்தியது. இது இவ்வாறிருக்க பதவிக்கு வந்த ஒவ்வொரு அரசும் கல்வி சீர்திருத்தம் என்ற பெயரில் அரசியல் மயமாக்கத்துடன் மக்களின் வரிப் பணத்தை செலவு செய்து தங்களுக்கு இசைவான பாடசாலைகளில் புதிய திட்டங்களை முன்னெடுத்துள்ளன.





# கல்முனையில், பிரதேச வியாபார நிலையங்களின் பாதுகாப்பு தொடர்பான விசேட கலந்துரையாடல்







(எஸ்.அஷ்ரப்கான்)

கல்முனைப் பிரதேச வியாபார நிலையங்களின் பாதுகாப்பு தொடர்பாக விசேட கலந்துரையாடல் கல்முனை பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் றேற்று (11) இடம்பெற்றது.

கல்முனை இருதயநாதர் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்ற இக் கலந்துரையாடல் கல்முனை போலீஸ் நிலைய பொறுப்பதிகாரி எம்.ரம்சின் பக்கீர் தலைமையில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர ஜெயந்த ரத்நாயக பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

பிரதம அதிதி இங்கு உரையாற்றுகையில், கல்முனை மாநகர வர்த்தகர்கள் எதிர்நோக்கும் சமகால பிரச்சனைகள் தொடர்பில் மிகவும் விரிவாக எடுத்துக் கூறி அதற்கான ஆலோசனைகளையும் அதிலிருந்து விடுபடுவதற்கான ஆலோசனைகளையும் தெளிவாக எடுத்துக் கூறினார்.

வர்த்தகர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக 0718591161, 0772311119,0777279095 ஆகிய இலக்கணங்களுடன் தொடர்பு கொள்ளலாம் என இங்கு பொலிசார் தெரிவித்தனர்.

இங்கு,கல்முனை உதவி பொலிஸ் அத்தியேட்சகர் புத்திக, கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக், கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும், சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான வாஹீட், கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பு அதிகாரி பொலிஸ் பரிசோதகர் ரத்நாயக்க, கல்முனை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி உட்பட கல்முனை பிரதேச வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# யாழ். வைத்தியசாலைக்கு மருத்துவ உபகரணங்கள்




செலிங்கோ லைஃப், யாழ் போதனா வைத்தியசாலையின் சிறுவர் மருத்துவத்திற்காக உயர் சார்பு பிரிவிற்கு (HDU) 2013ஆம் ஆண்டு உதவியதுபோல் அண்மையிலும் மருத்துவ உபகரணங்களைக் கையளித்தது.

ரூ. 2.1 மில்லியனுக்கும் அதிக பெறுமதியான Optiflow ehrptop ஒட்சிசன் சிகிச்சை உபகரணம் மற்றும் இரண்டு உட்செலுத்தல் பம்புகள் வழங்கப்பட்டன.

HDU வானது அண்மைக்காலத்தில் முழுமையாக இயங்கிவந்துள்ளது. இப்பிரிவானது, 2013ஆம் ஆண்டு பிரத்தியேகமாக அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, 5000ற்கும் மேற்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சை வழங்கியுள்ளதோடு, 2022ஆம் ஆண்டில் இங்கு 551 நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் வணிக மேம்பாட்டு உதவிப் பொது முகாமையாளர் திரு. K. Sumanthiran, வணிக மேம்பாட்டு சிரேஷ்ட முகாமையாளர் திரு. T. Nirojan ஆகியோர், செலிங்கோ லைஃப் நிறுவனத்தின் யாழ் பிராந்தியக் கிளைகளின் தலைவர்கள் முன்னிலையில் யாழ் போதனா வைத்தியசாலையின் சிறுவர் மருத்துவத்திற்கான தலைமைப் பேராசிரியர் கீதாஞ்சலி சத்தியதாஸ் அவர்களிடம் உபகரணங்கள் கையளிக்கப்பட்டன.



# டயலொக்கின் டிஜிட்டல் கல்வி உதவி

டயலொக் நிறுவனம்,விமானப்படை மற்றும் E-W Information Systems லிமிட்டட் ஆகியனவற்றுடன் இணைந்து திருகோணமலை, கன்னியாவில் அமைந்துள்ள இராவணேஸ்வரன் தமிழ் வித்தியாலயத்தின் கணினி ஆய்வு கூடத்தை மறுசீரமைக்கும் நோக்கில் டிஜிட்டல் கல்வி உபகரணங்களை வழங்கின.

இதன்போது, தொழில்நுட்பத்துடன் கூடிய படைப்பாற்றலை கொண்டதான Magicbit Pro அலகுகள் மற்றும் உணர்திறன் தொகுதிகளை டயலொக் வழங்கியது. Magicbit என்பது இன்டர்நெட் ஒஃப் திங்ஸ் (loT), ரொபோடிக்ஸ் (Robotics) இலக்ட்ரோனிக்ஸ் (Electronics) மற்றும் புரோகிரேமிங் (Programming) ஆகியவற்றிற்காக உருவாக்கப்பட்ட ஒரு கண்டுபிடிப்பு தளம் மற்றும் STEM கருவியாகும்.

டயலொக், மேலும் nedr டிவி (Nenasa TV) வசதியையும், முழுதாக கட்டணம் செலுத்தப்பட்ட மாணவர் புரோட்பேண்ட் (broadband) வசதிகளை வழங்குவதான உறுதிமொழியையும் வழங்கியது. நெனச டிவி என்பது கல்வி அமைச்சுடன் கூடிய அரச – தனியார் கூட்டு முயற்சியிலான ஓர் தொலைக்காட்சி சேவையாகும்.



# INSEE Cement நிறுவனத்தின் நிலையியல் அறிக்கை

INSEE Cement நிறுவனம், தனது பொருளாதார, சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொறுப்புகளை நிறைவேற்றி 2030 ஆம் ஆண்டளவில் நாட்டின் முதன்மையான நிலைபேற்றியல் ஆதரவு நிறுவனங்களில் ஒன்றாக மாறுவதற்கான “பசுமை & quot; இலட்சியத்துடன் தொடர்ந்து சிறப்பாக நடைபோட்டு வருகிறது.

கடந்த வாரம் வெளியிடப்பட்ட அதன் நிலைபேற்றியல் அறிக்கை 2020/2021 இல், காலநிலை மற்றும் எரிசக்தி துறைகள், சுழற்சிப் பொருளாதாரத்தை வலுப்படுத்துதல், பல்லுயிரினம் மற்றும் நீரைப் பாதுகாத்தல் ஆகிய துறைகளில் குறிப்பிடத்தக்க மற்றும் உறுதியான முன்னேற்றத்தை INSEE Cement எடுத்துரைத்துள்ளது.

மேலும், INSEE Cement இன் 2030 நிலைபேற்றியல் இலட்சியத்தின் முக்கிய அம்சங்களான, அதன் பணியாளர்களின் தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், சமூகங்கள் மற்றும் தொடர்புபட்ட பிற தரப்பினருக்கு ஊக்கமளிப்பதற்கும் எடுக்கப்பட்ட உறுதியான நடவடிக்கைகளும் இந்த அறிக்கையில் அடங்கியுள்ளது.

இந்த நிகழ்வில் உரையை ஆற்றிய சுற்றுச்சூழல் அமைச்சின் செயலாளரான வைத்தியர் அனில் ஜாசிங்க INSEE Cement நிறைவேற்றியுள்ள இந்த முயற்சிகளைப் பாராட்டினார்.







# JAAF இன் 19வது பொதுக்கூட்டம்

JAAF அதன் 19வது வருடாந்த பொதுக் கூட்டத்தை அண்மையில் நடத்தியது.இதில் ஷரட் அமலியன் அதன் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிரதித் தலைவர்களாக சைபுதீன் ஜாபர்ஜி மற்றும் பீலிக்ஸ் பெர்னாண்டோ உள்ளிட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஏகமனதாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் உரையாற்றிய தலைவர் அமலியன்,2025க்கு அப்பால் ஆடைத் தொழிலை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு இளம் தலைவர்களை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை JAAF ஏற்றுக்கொள்வதாக வலியுறுத்தினார்.

கடந்த ஆண்டு மிகவும் கடினமானதாக இருந்ததாகவும், பல ஆண்டுகளாக துயுயுகு தக்கவைத்து வரும் நம்பகத்தன்மை, சவாலான மற்றும் முன் எப்போதும் இல்லாத சமூக பொருளாதார நிலைமையில் போட்டியிடுவதற்கு அரசாங்கம், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் ஒழுங்குமுறை அமைப்புகளுடன் நெருக்கமாக பணியாற்றுவதில் தொழில்துறைக்கு மகத்தான ஆதரவை வழங்கியுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

# உறுதியான நிலையில் கொமர்ஷல் வங்கி

கொமர்ஷல் வங்கி 2022இல் உறுதியான நிலையை அடைந்துள்ளது.வங்கியின் கிளைகள் மற்றும் இணை நிறுவனங்கள் சொத்து வளர்ச்சியை 516.063 பில்லியன்களாக அல்லது 26.02 வீதமாக பதிவு செய்துள்ளன.

இதன் மூலம் சொத்துக்கள் 2.5 ட்ரில்லியன் பெறுமதியை அடைந்துள்ளன.மொத்த வருமான வளர்ச்சி 71.31 வீதமாக அதிகரித்து 280.387 பில்லியன்களாக உள்ளது.வட்டி வருமான வளர்ச்சி 67.44 வீதமாக அதிகரித்து 222.393 பில்லியன்களாக உள்ளது.

ரூபா மதிப்பிறக்கத் தாக்கத்தின் கழிவை பார்க்கின்ற போதும் தனியார் பிரிவுக்கான கடனில் கணிசமான குறைவையும் பார்க்கையில் கடன் புத்தகம் விளிம்பு நிலை வளர்ச்சியையே பதிவு செய்துள்ளது.

வைப்புக்கள் 505.103 பில்லியன்களாக அல்லது 34.30 வீதமாக வளர்ச்சி அடைந்துள்ளது. இதற்கும் ரூபாவின் மதிப்பிறக்கம் ஒரு காரணமாகின்றது.

குழுமத்தின் குறைபாட்டு கட்டண ஒதுக்கு மற்றும் நட்டங்களுக்கான ஒதுக்கு 71.924 பில்லியன்களாகும். இது 2021ன் ஒதுக்குத் தொகையான 25.140 பில்லியன்களிலும் அதிகமாக 46.784 பில்லியன்களாக அல்லது 186.10 வீதமாக அதிகரித்துள்ளது. இதன் விளைவாக முன் குறிப்பிட்ட 12 மாத காலத்தில் தேறிய செயற்பாட்டு வருமானம் 5.47 வீதத்தால் குறைந்து 64.712 பில்லியன்களாக உள்ளது. இது நான்காம் காலாண்டில் 24.90 வீதம் அல்லது 13.147 பில்லியன்களாக உள்ளது. வருடத்துக்கான ஒட்டு மொத்த செயற்பாட்டு வருமானம் 43.038 பில்லியன் அல்லது 45.98 வீத துரித வளர்ச்சியை காட்டி 136.637 பில்லியன்களாக உள்ள நிலையிலும் இது பதிவாகி உள்ளது.



# வடக்கு - கிழக்கில் டேவிட் பீரிஸின் உல்லாச நிகழ்வுகள்

சுற்றுலாத் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கில் டேவிட் பீரிஸ் குழுமம் அண்மையில் வடக்கு, கிழக்கில் கோ-கார்ட்டிங் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தது.

காத்தான்குடி கடற்கரை சதுக்கத்திலும், யாழ்ப்பாணம் பண்ணை வீதியிலும் சிறிய கோ-கார்ட் பாதைகள் அமைக்கப்பட்டன. இந்த இரு நிகழ்வுகளும் செயல்விளக்க பந்தயங்கள், வழிப்படுத்தும் வீடியோக்கள் மற்றும் செலுத்துனர்கள் தமது அனுபவங்களை பகிர்வதற்கான சந்தர்ப்பங்கள் என்பவற்றை உள்ளடக்கியிருந்தன.




“DPG கிழக்கு மாகாண கிரிக்கெட் திருவிழா“ என்ற தொனிப்பொருளில் DPG அணிக்கும் காத்தான்குடி சமூகத்துக்கும் இடையில் கல்லடி சிவானந்தா மைதானத்தில் கிரிக்கெட் போட்டியும் நடைபெற்றது.

கோ-கார்ட்டிங் பந்தயத்துக்கு சமாந்தரமாக இந்தப் போட்டி நடைபெற்றது.

வெற்றிபெற்ற அணி,போட்டியின் நாயகன், சிறந்த பந்துவீச்சாளர், சிறந்த துடுப்பாட்டக்காரர் போன்ற விருதுகளும் இங்கு வழங்கப்பட்டன.

அம்மாகாணங்களில் குழுமத்தை விஸ்தரிப்பதற்கான விசேட திட்டத்தை டேவிட் பீரிஸ் குழுமம் 2022ஆம் ஆண்டு ஆரம்பித்தது.

இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்கவும், தற்பொழுதுள்ள வாடிக்கையாளர்களுக்கு குழுமத்தின் வசதிகள் கிடைக்கச் செய்வதற்கும் இரு மாகாணத்திலும் உள்ள வர்த்தக சம்மேளனங்கள் முன்வந்துள்ளன.